# சார்பு நீதிமன்றம், அவிநாசி

# OS –476/2016

நாள் 20.08.2025

PW1 – சரஸ்வதி

க/பெ – லேட்.பழனிச்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of August 2025.)**

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் இந்த வழக்கை 2012-ம் ஆண்டில் திருப்பூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் தாவா ஏ, பி அட்டவணை சொத்துக்களாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அதில் கண்டுள்ள சர்வே எண்களுக்கு புதிய உட்பிரிவு எண் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல், அந்த சொத்துக்களுக்கு பட்டா எண்.188 மற்றும் பட்டா எண்.103 என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டா எண், உட்பிரிவு எண்கள் குறித்த விவரம் எதுவும் தாவா பிராதுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது சொத்துக்கள் சம்மந்தமான பட்டா கணினியில் தான் பராமரித்து வருகிறது என்றால் சரிதான். அதனால், தாவா சொத்துக்களுக்குரிய கணினி பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பட்டாக்கள் நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அ-பதிவேட்டில் பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த அ-பதிவேட்டியின் நகல் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான்

சொல்லுவது போல வா.சா.ஆ.15ல் உள்ள சர்வே எண்.56/2பி9 –க்கு பட்டா எண்.1830–ல் எனது மாமியார் மயங்காத்தாள் பெயரோ, எனது கணவர் பழனிசாமி பெயரோ கிடையாது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அதனால் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் பொய்யான ஆவணங்கள் என்பதால் அது சட்டப்படி ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.08.20 16:45:02 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**